# Chezhumai

# செழுமை

# TIST India




T I S T  F a r m e r s  H e l p  W o r l d w i d e  P r o b l e m

## The International Small Group & Tree Planting Program

TIST India: 19/8, Lake View Road, Kottur, Chennai 600 085, Tamil Nadu, India
Phone : +91 44 42188438 / Mobile: +91 9840299822 / Email: josephrexon@tist.org

## HELPLINE

For any information or help
Dial 9003020836 / 9003020837

If you have any difficulty in
TIST Program dial 9840299822

Our landline: +91 44 42188438

Our email: josephrexon@tist.org

Our address: 19/8, Lake View Road,

## தொழில் முறை உதவி

எந்த தகவல் அல்லது உதவிக்கு **9003020836 / 9003020837** ஐ டயல் செய்யவும்.

டி.ஐ.எஸ் டி திட்டத்தில் உங்களுக்கு ஏதாவது கஷ்டம் இருந்தால் **9840299822** ஐ டயல் செய்யவும்

ஏங்களது தொலைபேசி
+91 44 42188438

எங்களது மின் அஞ்சல் (ஈ–மெயில்)
josephrexon@tist.org

எங்களது விலாசம்
**19/8**, ஏரிக்கரைச் சாலை, கோட்டூர்
சென்னை **600085**.

## TIST in Villupuram, Dharmapuri & Krishnagiri Districts

Since mid of 2008, TIST India is exploring Villupuram, Dharmapuri and Krishnagiri Districts for expanding the program. Several farmers have shown interest in TIST Program and have joined in TIST Program as Small Groups.

The Conservator of Forests of Villupuram and Dharmapuri circle are very helpful to TIST and they are taking TIST Program to several farmers in their circle. TIST extends a big thanks to the Conservator of Forests of Villupuram and Dharmapuri circle.

## TIST திட்டம் விழுப்புரம், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில்

ஜீன் மாதம் 2008ல் இருந்து TIST விழுப்புரம், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தனது (TIST) திட்டத்தை விவசாயிகளிடையே கூறிவருகிறது. அனேக விவசாயிகள் TIST திட்டத்தில் ஆர்வம் காட்டி சிறுகுழுக்களாக திட்டத்தில் சேர்ந்து வருகின்றனர்.

விழுப்புரம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களை சார்ந்த வனபாதுகாவளர்கள் TIST திட்டத்திற்க்கு மிகவும் உதவுகிறார்கள். அவர்களுக்கு TIST இந்தியா மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறது.





TIST Director is explaining the TIST Program to the farmers of Villupuram District with the help of the Conservator of Forests of Villupuram District
TIST இயக்குநர் விழுப்புரம் மாவட்டத்தை சார்ந்த வனபாதுகாவளரின் உதவியோடு விழுப்புரத்தில் விவசாயிகளுக்கு TIST திட்டத்தை பற்றி எடுத்துரைக்கிறார்

## Useful trees to plant

It is good to plant useful trees. Most of the group members are planting useful long standing trees. The below write-up on Ben Teak Tree is a copy from "Valam Tharum Marangal Part 5". If anyone is interested to have the same in English, please write a mail to josephrexon@tist.org or call 9840299822.

## பலன் தரும் மரங்கள்

நல்ல பலன் தரும் மரங்களை நடுவது ஒரு நல்ல செயல். அனேகமான சிறுகுழு உறுப்பினர்கள் பலன் தரும் நீண்ட கால மரங்களை நடவு செய்கின்றனர். கீழே வரும் இந்த வெண் தேக்கு மரத்தினை பற்றிய கட்டுரை வளம் தரும் மரங்கள் (பாகம் 5) புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் பெற விருப்பம் உள்ளவர்கள் தயவு செய்து இந்த மெயிலுக்கு எழுதவும் josephrexon@tist.org அல்லது செல்:9840299822.

## வெண் தேக்கு – பயிர் முறை

தேக்கு மரத்திற்கு இணையான அம்சங்களைக் கொண்டுள்ளது வெண்தேக்கு. கடினத்தில் தேக்கையும் மிஞ்சி விடும். பல்வேறு சாமான்கள் செய்ய ஏற்றது: ஒட்டுப் பலகையும் தயாரிக்கலாம். படகு செய்ய மிகவும் உகந்த மரம். வெண் தேக்கு, நீர் செறிப்புள்ள நல்ல வடிகால் திறனுடைய பகுதிகளில் வளரும் மரமாகும். செம்புறை மண் வயணங்களில் வளர்க்க ஏற்றது. எனவே மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய கிராமப் பகுதிகளில் வளர்க்கலாம். இங்கு காட்டோடைகள், குட்டைக் கரைகள் ஆகிய இடங்களில் நடலாம். மற்றும் தோட்டங்களில், ஒரு சில மரங்களை வளர்ப்பது, நல்ல முதலீடாக இருக்கும். தஞ்சையில் புது டெல்டாப் பகுதியிலும், மற்றும் தென்ஆற்காடு, செங்கல்பட்டு பகுதிகளிலும், தர்மபுரியில் ஒசூர் பகுதிகளிலும் இவ்விதமே பள்ளமான பகுதிகளில் நட்டு வளர்க்க முடியும். அதிக மழையுள்ள மலைப் பகுதிகளில், தோதகத்தியுடன், வெண் தேக்கு மரத்தை வனத்துறையினரும் வளர்ப்பது அவசியமாகும். அதிலும் வெட்டிய மரங்கள் துளிர்த்து 40 ஆண்டுகளிலேயே நன்கு வளருவதால், ஒரு முறை நட்டு, பின்னர் தொடர்ந்து பயனடையலாம்.

வெண் தேக்கை வளர்க்க, விதையை நாற்றுவிட்டு, கன்றுகளை எடுத்து நடவேண்டும். மரத்திலேயே நெற்றுக்கள் வெடித்து விடுவதால், முற்றிய நெற்றுக்களை அடித்து உதிர்த்து, விதை சேகரிக்க வேண்டும். விதையை மேட்டுப் பாத்திகளில் நாற்று விட்டு, நன்கு வளர்ந்த கன்றுகளை 6 x 6 மீட்டர் இடைவெளியில் நடலாம். ஆரம்பத்தில் சிறிது உயரமான பயிர்களின் ஊடே நட்டால், இக்கன்றுகள் துரிதமாக வளரும். 50 ஆண்டுகளுக்கு மேல் இம்மரத்தை வெட்டி பயனாக்கலாம்.



P. ஜானாகிராமன்

## Important news to the Small Groups of Thiruvallur District

Mr.P.Janakiraman is the Coordinator for Thiruvallur District. He will attend all the Node meetings in Thiruvallur District. His mobile number is 9003020843. For all queries and advice on TIST Program, Small Groups of Thiruvallur District are requested to contact Mr.P.Janakiraman only.

Mr.A.Selvam who was working in Thiruvallur District is no longer part of TIST India; all the small groups are requested not to contact Mr.Selvam for any TIST Program activities.

## திருவள்ளூர் மாவட்டத்தை சார்ந்த சிறுகுழுக்களுக்கு ஓர் முக்கிய செய்தி

திரு. P. ஜானாகிராமன் திருவள்ளூர் மாவட்டத்திற்கான ஒருங்கிணைப்பாளர். இவர் எல்லா கணுக்கூட்டங்களிலும் கலந்து கொள்வார். அவரது கைப்பேசி எண் : 90030 20843. TIST திட்டத்தில் எதாவது சந்தேகங்கள் மற்றும் கேள்விகள் இருந்தால் P. ஜானாகிராமனை அணுகவும்.

திருவள்ளுர் மாவட்டத்தில் பணியாற்றிய திரு A. செல்வம் TIST யின் பணியில் இல்லை. எந்த ஒரு TIST திட்ட காரணத்திற்காகவும் அவரை அணுக வேண்டாம், எனெனில் அவர் TIST பணியில் இல்லை.

## Practicing Intercrops Small Groups of Thiruthani Center

Practicing intercrops in between the trees is a good practice. Select a good short time crops for your tree groves and practice it, which will certainly give additional financial support. There are several short time crops like, groundnut, chilly, tomato, brinjal, ladies finger, etc. Few groups have tried cluster beans & bitter guard too, which grows well in between teak trees. The small groups of Thiruthani Center are very keen in practicing short time crops as intercrops in between their mango and teak trees. Small Groups from other centers can join in Thiruthani Node meetings to know the best practices from Thiruthani Center, mainly growing mango trees and practicing intercrops in between mango trees.

## ஊடு பயிர் செய்வது – திருத்தனி மையத்தை சேர்ந்த சிறுகுழுக்கள்

மரங்களிடையே ஊடுபயிர் செய்வது ஒரு சிறந்த பழக்கமாகும். நல்ல குறுகிய கால பயிர்களை தேர்வு செய்து உங்களது மரத்தோப்புகளில் பயிரிடலாம், அது உங்களுக்கு நல்ல கூடுதல் வருமானத்தை பெற்று தரும். நல்ல குறுகிய கால பயிர்களான வேர்க்கடலை, மிளகாய், தக்காளி, கத்திரிக்காய், வெண்டை போன்றவற்றை பயிரிடலாம். சில குழுக்கள் கொத்தவரகாய் மற்றும் பாவர்க்காய் போன்ற பயிர்களை தேக்கு மரங்களுக்கிடையே பயிரிட்டுள்ளனர். திருத்தனி மையத்தை சார்ந்த சிறுகுழுக்கள் அவர்களது மா மற்றும் தேக்கு மரங்களுக்கிடையே ஊடுபயிர் செய்வதில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர். மற்ற மையத்தை சார்ந்த குழுக்கள் திருத்தனி மையத்தில் உள்ள கணுக்கூட்டங்களில் கலந்து கொண்டு மா மரங்களை எவ்வாறு பராமாரிக்கலாம் மற்றும் மாமரங்களிடையே எவ்வாறு ஊடுபயிர் செய்யலாம் என்றவற்றை அறிந்து கொள்ளலாம்.



Member of Thiruthani Group Center is all happy, showing this mango and teak tree grove
திருத்தனி மையத்தை சார்ந்த ஓர் உறுப்பினர் அவரது மா மற்றும் தேக்கு மரதோப்புகளை மகிழ்ச்சியுடன் காட்டுகிறார்

## Beekeeping for additional income

Honey production is a money-spinning business and it gives great employment opportunity. We can surely get good expertise from the Tamilnadu Forest Department for beekeeping. Interested small groups can contact your coordinator during the Node meeting to know more on beekeeping.

## கூடுதல் வருமானத்திற்காக தேனீகள் வளர்த்தல்

தேன் தயாரிப்பது நல்ல வருமானத்தை பெற்று தரும் மற்றும் வேலை வாய்ப்பை அதிகாரிக்கும். தேனீகள் வளர்ப்பதற்கான நல்ல பயிற்சிகளை வனதுறையிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். தேனீகள் வளர்ப்பதில் ஆர்வம் உள்ள சிறுகுழுக்கள் தங்களது ஒருங்கினைப்பாளரை கணுக்கூட்டங்களில் அனுகவும்.



Ranger from Forest Extension Center explaining about Teak Trees to a TIST Member
வனவியல் விரிவாக்கமையத்தை சார்ந்த ஓர் வனசரகர் தேக்கு மரத்தை பற்றி உறுப்பினர்களுக்கு எடுத்து உரைக்கிறார்

## Name Plate for the Groves

It is very important to have a name plate for the groves. Few Small Groups have placed a name plate. TIST requests all the Small Groups to immediately put up a name plate for every grove.

## தோப்புகளுக்கான பெயர் பலகை

தோப்புகளுக்கு ஒரு பெயர் பலகை வைப்பது மிகவும் முக்கியமானதாகும். சில சிறுகுழுக்கள் பெயர் பலகை வைத்துள்ளனர். ஒவ்வொரு தோப்புக்கும் உடனடியாக பெயர் பலகை வைக்க அனைத்து சிறுகுழுக்களையும் TIST வேண்டிகொள்கிறது.

## CCF, Forest Extension at TIST Voucher Distribution Meeting

TIST organized a meeting at the Forest Extension Center Training Hall, Poondi, Thiruvallur on 18.07.2009 to (1) address the members on the usefulness of trees, (2) using the trees for additional benefit, (3) to distribute vouchers to the groups. 110 members from more than 70 Small Groups participated in the meeting. Mr.V.Irulandi, Chief Conservator of Forests (CCF), Forest Extension Center was the Chief Guest. The CCF was glad to see several TIST members gathered together at the Forest Extension Center Training Hall for the meeting organized by TIST. The CCF in his speech explained the cause for global warming and emphasized the TIST members to plant more number of trees and protect the trees for several years to save the environment.

## தலைமை வனப்பாதுகாவளர், வனவியல் விரிவாக்க மையம் TIST யின் ஊக்கத்தொகை வழங்கும் கூட்டத்தில்

18/07/2009 அன்று TIST இந்தியா வனவியல் விரிவாக்கமையத்தை சேர்ந்த பயிற்சி அளிக்கும் கூடத்தில் TIST உறுப்பினர்களுக்காக ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்தது. இக்கூட்டத்தில், (1) உறுப்பினர்களுக்கு மரங்களின் முக்கியத்துவத்தை, (2) மரங்களை கூடுதல் வருமனத்திற்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்று விளக்கப்பட்டது, மற்றும், (3) TIST சிறுகுழுக்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. 70வது சிறுகுழுவில் இருந்து 110 உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். திரு. வி. இருலாண்டி, தலைமை வனப்பாதுகாவளர் (வனவியல் விரிவாக்கமையம்) சிறப்பு விருந்தினராக இக்கூட்டத்தில் கலந்து கொண்டார். அனேக TIST உறுப்பினர்கள் ஆர்வமுடன் இக்கூட்டத்தில் பங்கேற்றதைக்கண்டு தலைமை வனப்பாதுகாவளர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். அவரது சிறப்பு உரையில் அவர் பூமி எந்த காரணத்தினால் வெப்பமடைகிறது என்று எடுத்துரைத்து, TIST உறுப்பினர்களை அதிகமாக மரங்களை நடவு செய்து சுற்றுப்புற சூழலை துய்மைபடுத்த கேட்டுக் கொண்டார்.






Chief Conservator of Forests address the TIST members
தலைமை வனபாதுகாவளர் TIST கூட்டத்தில் சொற்பொழிவு ஆற்றுகிறார்

He talked about tree biology, how trees grow, made the members understand this theory so that, they give better care for all the trees. He emphasized the members to plant those trees which would give them some good additional yield. He said that TIST Program is spread in districts like Thiruvallur, Vellore, Kanchipuram and Thiruvannamalai, this is a good Program for the farmers and the farmers should use this opportunity in a better way. He also said that to have more additional income practice poultry management, vermiculture, dairy farming, bee keeping etc., and told the members that he would certainly help them to increase their economic generation by providing training on various multifarious projects. After his speech, he gave lot of time to the members for questions and he answered all the questions in detail.

மேலும் அவர் தாவரங்களைப் பற்றி ஆழமாக எடுத்துரைத்தார், ஏனெனில் தாவரங்களைப் பற்றி நன்கு தெரிந்துக் கொண்டால் தான் மரங்கள் நடவு செய்யும் திட்டத்தில் மரங்களை நன்றாக பராமரிக்க முடியும் என்று கூறினார். அவர் TIST உறுப்பினர்களை மரங்கள் நடவு செய்யும் போது மரவகைகளை தேர்வு செய்து, எந்த வகை மரத்தை நட்டால் நல்ல கூடுதல் வருமானம் பெறலாம் என்று அறிந்து மரங்களை நடவு செய்யுங்கள் என்று கூறினார். மேலும் அவர் TIST திட்டம் திருவள்ளுர், வேலூர், காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் நடைபெற்று கொண்டு இருக்கிறது, இம்மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் இந்த நல்ல திட்டத்தை பயன்படுத்தும்மாறு கூறினார். கூடுதல் வருமானத்திற்க்கு கோழி பண்ணை, மண்புழு தயாரித்தல், கால்நடை வளாத்தல் மற்றும் தேனீக்கள் வளர்த்தல் போன்ற நல்ல திட்டங்களை செய்யலாம், இதற்காக நாங்கள் (வனத்துறை) நல்ல உதவி அளிப்போம் என்று உறுதியளித்தார். கூட்டத்திற்கு பிறகு தலைமை வனப்பாதுகாவளர் TIST உறுப்பினர்களின் சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கு நல்ல விளக்கம் அளித்தார்.




Chief Conservator Forests distributing TIST Vouchers to TIST Small Groups
தலைமை வனபாதுகாவளர் TIST குழுக்களுக்கு பற்றுச்சீட்டை வழங்குகிறார்.

Finally, TIST distributed vouchers to the groups through the CCF. The CCF was very glad to distribute the vouchers to the groups. The members were very happy to receive TIST vouchers from the hands of the CCF; they promised to plant more number of trees and protect all their trees for several years.

சிறப்பு விருந்தினர், தலைமை வனப்பாதுகாவளர் கையால் TIST இந்தியா சிறுகுழுக்களுக்கு ஊக்கத்தொகை வழங்கியது. தலைமை வனப்பாதுகாவளர் இந்த ஊக்கத்தொகையை TIST உறுப்பினர்களுக்கு கொடுப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். உறுப்பினர்களும் தலைமை வனப்பாதுகாவளர் கையால் TIST யின் ஊக்கத்தொகையை பெற்றதில் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர். உறுப்பினர்கள் அனைவரும் அதிகமான மரங்களை நட்டு நன்கு பராமரிப்போம் என்று உறுதி அளித்தனர்.



Chief Conservator of Forests answering all the questions and doubts of TIST members in detail

தலைமை வனபாதுகாவளர் TIST உறுப்பினர்களின் கேள்வி மற்றும் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கிறார்

The wounds we have inflicted on the Earth can be healed ... But if it is to be done, it must be done now. Otherwise, it may never be done at all

- Plant Trees and save the Earth

நம்மால் பூமிக்கு ஏற்ப்பட்ட காயங்களை குணமாக்கலாம், ஆனால் இதை செய்யவேண்டு மென்றால் இதுதான் சரியான நேரம் இல்லையெனில் செய்யவே இயலாது – மரங்களை வளர்த்து பூமியை காப்பாற்றுங்கள்




Mr.Alwin Rathnarajan, Manager

## Pallavan Grama Bank is ready to help TIST Members - Mr.Alwin Rathnarajan, Manager, Pallavan Grama Bank, Vellore Branch.

We are living in a turbulent scenario, earth is getting warmer, change in seasonal rain falls and melting iceberg. Some say that these are natural adversity. The place where we are living in is a natural world and for our development, we have badly treated the nature and that is the cause for all the turbulence, we shouldn't forget this.

Who destroyed the forest badly? Who harvested the trees unnecessarily? We are accountable for the climate change and it is our responsible to make it normal. Farmers are requested to join in TIST Program and plant as many as trees possible. Trees planted by you will not clean your area or your country, but it will also clean the whole environment. Note that the Pallavan Grama Bank (Government Bank) is ready to help your small groups to open SB account. We are happy to say that our bank will help you all for all your agricultural activities.

All the branches of Pallavan Grama Bank at Thiruvannamalai and Vellore Districts have helped TIST Small Groups to open SB account, which helped the Small Groups to receive voucher payment from TIST quickly. TIST India extends a big thanks to Pallavan Grama Banks of Thiruvannamalai and Vellore Districts.

## TIST குழுக்களுக்கு அரசுத்துறை வங்கியான பல்லவன் கிராம வங்கி கணக்குகள் துவங்க தயராயிருக்கிறது - திரு. ஆல்வின் ரத்னராசன், மேலாளர், பல்லவன் கிராம வங்கி, வேலூர் கிளை

பூமி வெப்பமயமாகுதல், பருவமழை பருவத்தை கடந்து வருவது, உருகும் பனிமலைகள் என்று பூமி தடுமாறும் ஒரு காலகட்டத்தில் வாழ்கிறோம். இயற்கையின் சதி என்று கூட பலர் குமுறுகிறார்கள். ஆனால் இயற்கை இயற்கையாக இருப்பதால் தான் அதை இயற்கை என்கிறோம் என்பதை மறக்ககூடாது. அதே வேலையில் இயற்கைக்கு எதிராக மனிதகுலம் நடந்து கொண்டதால் தான் பூமியில் குழப்பம் என்பதை மறுக்கவும் இயலாது.

கண்மூடித்தனமாக காட்டை அழித்தது யார்? மடமையாக மரத்தை வெட்டி தள்ளினது யார்? இயற்கையாக வரவேண்டிய சமநிலையை சிரழித்தது நாம் தான். அதை சரிசெய்ய வேண்டிய கடமையையும் நம்மேல் தான் உள்ளது. ஆகவே விவசாயிகளே TIST நிறுவனத்துடன் இனைந்து எத்தனை மரங்கள் நட இயலுமோ அத்தனை மரம் நடுங்கள். நீங்கள் நட்டு வளர்க்கும் மரம் இந்த பகுதியை மட்டும்மல்ல நாட்டைமட்டும் அல்ல, உலகத்தையே வளமாக்குகிறது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். உங்கள் குழுக்களுக்கு அரசுத்துறை வங்கியான பல்லவன் கிராம வங்கி கணக்குகள் துவங்க தயாராயிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள். விவசாயத்திற்கு தேவைப்படும் அனைத்து வளர்ச்சிக்கும் விதிக்குட்பட்டு வங்கி சேவை செய்ய தயாராயிருக்கிறது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்டங்களில் உள்ள பல்லவன் கிராம வங்கி TIST சிறுகுழுக்களுக்கு வங்கி கணக்கு துவங்க மற்றும் குழுக்கள் எளிதாக TIST யின் ஊக்கத்தொகை பெற உதவியுள்ளது. இந்த நல்ல செயலுக்கு TIST இந்தியா திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்டங்களில் உள்ள எல்லா பல்லவன் கிராம வங்கிகளுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

## Question and Answer

### TIST ignored to make voucher payment for one quarter, why?

**Answer:** Voucher has lot of the details about groups like, group name, village name, group center name & number and voucher statement date. Other than these, there are few important details like (1) number of seedlings & trees approved for payment, (2) for which quarter the voucher is generated and (3) monthly reports submitted. Under the monthly reports submitted column if you see the (<3) symbol, it indicates that you are not getting payment for that particular quarter. The reason for not getting payment will be mentioned below in the report. If you read the report, you will find that you have not submitted the SGMR (Small Groups Monthly Report) for few months and for that reason, you have not received the payment. Do not get alarmed for this, meet your quantifier or coordinator in the Node meeting and explain them the reason for not submitting the SGMR on time and request the quantifier or coordinator to enter the SGMR's in the palmtop for the missed out months. Once this exercise is done, you will get the payment for the missed out quarter too. Attending the Node meeting and submitting the SGMR is very important to receive the voucher payment in time.

## கேள்வி பதில்

### எங்கள் சிறுகுழுவிற்க்கு ஒரு காலாண்டிற்கான ஊக்கத்தொகையை TIST ஏன் நிறுத்திவிட்டது ?

**பதில் :** ஊக்கத்தொகை வழங்கும் வவுச்சர், அதாவது பற்றுச்சீட்டு, இதில் குழுக்களை பற்றிய விவரங்கள் அச்சடிக்கப்பட்டுள்து. குழுவின் பெயர், குழுவின் கிராமம், குழுவின் மையப்பெயர் மற்றும் எண், பற்றுச்சீட்டு தயாரித்த தேதி போன்ற விவரங்கள் அனைத்தும் இந்த வவுச்சரில் அச்சடிக்கப்பட்டுள்து. இவ்விரங்களை தவிர மேலும் முக்கியமான விவரங்கள் அதாவது, (1) எத்தனை கன்றுகள் மற்றும் மரங்களுக்கான ஊக்கத்தொகை குழு பெற உள்ளனர், (2) எந்த காலாண்டிற்காக இந்த வவுச்சர் தயாரிக்கப்பட்டுள்ளது, (3) எத்தனை மாதத்திற்கான மாதாந்திர அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது போன்ற விவரங்களும் இந்த வவுச்சரில் அச்சடிக்கப்பட்டுள்ளது. பற்றுச்சீட்டில் (வவுச்சர்) மாதாந்திர அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா, இல்லையா என்ற இடத்தில் **(3)** குறியீடு அச்சடிக்கப்பட்டு இருந்தால், அந்த காலாண்டிற்கான ஊக்கத்தொகை வழங்கப்படவில்லை என்று அர்த்தம். இதற்கு என்ன காரணம் என்று கீழே அச்சடிக்கப்பட்டுள்து. இதை படித்து பார்த்தால், நீங்கள், அதாவது உங்களது குழு அந்த காலாண்டில் எதாவது ஒரு மாதத்திற்கான மாதாந்திர அறிக்கை சமர்ப்பிக்கப்பட வில்லை என்று தெரியவரும். இதற்காக அச்சப்பட தேவை இல்லை. உங்களது கணுக்கூட்டத்தில் கணக்கீட்டாளர் அல்லது ஒருங்கிணைப்பாளார் இடம் மாதாந்திர அறிக்கை சமர்ப்பிக்கபடாத காரணத்தை கூறி, விட்டுபோன மாதத்திற்கான மாதாந்திர அறிக்கையை சமர்ப்பிக்கவும். இவ்வாறு செய்தால் விட்டு போன அந்த காலாண்டிற்கான ஊக்கத்தொகை உங்களுக்கு கிடைத்துவிடும். ஒவ்வொரு மாதமும் தவறாமல் கணுக்கூட்டங்களில் பங்குபெறுவது மிகமுக்கியமான ஓர் நற்செயல். இக்கூட்டத்தில்தான் நீங்கள் உங்களது மாதாந்திர அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். இக்கூட்டத்திற்க்கு வர தவறினால் மாதாந்திர அறிக்கை தர இயலாது, இது உங்களது ஊக்கத்தொகையை தாமதப்படுத்தும். பற்றுச்சீட்டை பெற்றவுடன் கவனமாக படித்துப் பார்க்கவும்.

| | | | |
|---|---|---|---|
| மையக்குழு பெயர் *Group Center Name:* | *Thurinjapuram* | மையக்குழு அடையாளம் *Group Center Code:* | Tpuram |
| கிராமம் *Village:* | Devanampattu | குழு எண் *Group Number:* | 70 |
| குழுப் பெயர் *Group Name:* | Polatciyamman | பட்டியல் தேதி *Statement Date:* | 20 பிப்ரவரி 2009 *20 February 2009* |
| காலப்பகுதி *Statement Period:* | ஜனவரி 2008 / டிசம்பர் 2008 *January 2008 - December 2008* | *TIST Number* | *2008IN373* |

பிழைத்த மரங்கள் மற்றும் நாற்றுக்களின் அடிப்படையில் வழங்கப்படும் பணம்
*Tree Payments Outstanding:*

| தேதி Date | நாற்றுகள் Seedlings | மரங்கள் Trees | Total | மொத்தம் Total Approved | | அளிக்கப்பட்ட தொகை Payment | குழு பூர்த்தி செய்த மாதாந்திர அறிக்கைகள் Monthly Reports Submitted |
|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி 2008 / மார்ச் 2008 | 0 | 612 | 612 | 612 | x Rs 0.37 | Rs 226.44 | 3 |
| ஏப்ரல் 2008 / ஜூன் 2008 | 0 | 612 | 612 | 612 | x Rs 0.37 | Rs 226.44 | 3 |
| ஜூலை 2008 / செப்டம்பர் 2008 | 0 | 612 | 612 | 612 | x Rs 0.37 | Rs 226.44 | 3 |
| அக்டோபர் 2008 / டிசம்பர் 2008 | 0 | 612 | 612 | 612 | x Rs 0.37 | Rs 226.44 | <3 |

வங்கி சிறு குழுக்கு அளிக்க வேண்டிய தொகை Rs 0.00
*Total Now Available for Bank Deposit:*

கடந்த மூன்று மாதத்திற்கான மாதாந்திர அறிக்கையை சமர்ப்பிக்காத காரணத்தினால், தங்கள் சிறு குழுவிற்கான ரசீதை பெறும் வாய்ப்பு தவறிவிட்டது. மேலும் விவரங்களுக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை பார்க்கவும். தங்கள் குழுவிற்க்கான மாதாந்திர அறிக்கையை வரும் காலங்களில் தவறாமல் சமர்ப்பிக்கவும். கடந்த ஆறு மாதங்களாக தங்கள் சிறுக் குழுவால் சமர்ப்பிக்கப்படாத மாதாந்திர அறிக்கைகள். நவம்பர் 2008இ டிசம்பர் 2008இ ஜனவரி 2009இ பிப்ரவரி 2009 தங்கள் வங்கியை பற்றிய தகவல்களை இதுவரை சமர்ப்பிக்கவில்லை. தங்களுடைய மாதாந்திர அறிக்கையில் வங்கியை பற்றிய விவரங்களை தெரிவிக்கவும். தங்களுக்கு அவ்வங்கியில் வரவுக் கணக்கு இருந்தால், அதனுடைய எண் மேலும் விவரங்களை மாதாந்திர அறிக்கையில் சமர்ப்பிக்கலாம்.
*Your group has not received a voucher this month for all outstanding quarters. This is because your group did not submit 3 small group monthly reports in a row. Please see below for the monthly reports that TIST did not receive from your group which resulted in your group not receiving a voucher. Please make sure you submit a small group monthly report each month from here-onwards. Monthly Reports Not Submitted by your Group in the last 6 months: November 2008, December 2008, January 2009, February 2009. Your group has not provided TIST with the name of the Bank Branch where you would prefer to cash your vouchers. Please submit your Bank Branch Preference on your Small Group Monthly Report. If you have a Bank Account open at that Branch, then you can submit the Account*

Groups are requested to go through the voucher carefully to know about your payment.
வவுச்சரில் (பற்றுச்சீட்டு) அச்சடிக்கப்பட்ட எல்லா விவரங்களையும் கவனிப்பாக படித்துபாருங்கள்

## Job Opportunity for TIST Small Group Members

There are few vacancies in TIST India like, Quantifier & Coordinator. Interested members may meet your TIST Officials. You can also introduce your relatives and friends for these jobs, but they should join with TIST as Small Groups before taking up the responsibilities of a Quantifier or Coordinator.

## TIST சிறுகுழு உறுப்பினர்களுக்காக வேலை வாய்ப்பு

டிஜஎஸ்டி இந்தியாவில் உள்ள காலியாக இருக்கும் பணி இடங்கள் – ஆய்வாளர் / கணக்கெடுப்பாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர். விருப்பம் உள்ள அங்கத்தினர் உங்களின் டிஜஎஸ்டி அதிகாரிகளை சந்தியுங்கள். உங்களின் உறவினர்களையும், நண்பர்களையும் இந்த பணி இடங்களுக்காக அறிமுகப்படுத்தலாம். ஆனால் அவர்கள் சிறு குழுக்களில் சேர்ந்த பின்பே கணக்கெடுப்பாளர் / ஒருங்கிணைப்பாளராக பொறுப்பு ஏற்றுக்கொள்ள இயலும்.

## டிஐஎஸ்டி நிகழ்வில் பங்குகொள்ள அங்கத்தினர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய தகுதிகள்

1. ஒவ்வொரு சிறு குழுவிலும் குறைந்தது மூன்று வெவ்வேறு குடும்பங்களை சார்ந்த 6 முதல் 12 உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.

2. ஒவ்வொரு சிறு குழுவும் குறைந்தது 1,000 உயிர் மரங்களை, டிஐஎஸ்டியில் சேர்ந்த ஒரு வருடத்திற்குள் வளர்க்க வேண்டும்.

3. டிஐஎஸ்டியில் சேர்ந்து ஐந்து வருடங்களுக்குள் குறைந்தது 5,000 உயிர் மரங்களை கொண்டிருக்க வேண்டும்.

4. உங்கள் சிறு குழு ஒவ்வொரு வருடமும் 20, வருடங்களுக்கு அழிந்த அல்ல விழுந்தபோன மரங்களின் இடத்தில் புதிய மரங்களை வளர்க்க வேண்டும.,

5. எல்லா சிறு குழுவும் கீரீன்ஹவுஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும்.

6. டிஐஎஸ்டி ஒரு வருடத்திற்கு ஒரு உயிர் மரத்திற்கு ரூ.1.50 (US $0.03) கொடுக்கும் (கீரீன் ஹவுஸ் உடன்படிக்கையை படித்து மேலும் விவரங்களை தெரிந்து கொள்ளுங்கள்).

7. புதர்கள் அல்லது 4மீ உயரத்திற்கு குறைவாக வளரும் இனவகை மரங்களை டிஐஎஸ்டி மரமாக கணக்கில் எடுத்து கொள்ளாது.

8. 2மீஇடைவெளிக்கும் குறைவாக பயிரிடப்படும் மரங்கள் கணக்கில் எடுக்க இயலாது.

9. 10 வருடங்கள் அதற்கு மேல் வளர்ந்த மரங்களையே டிஐஎஸ்டி அறுவடை செய்ய அனுமதியளிக்கும். எனினும் ஒரு வருடத்திற்கு 5 சதவிகிதத்திற்கு மேலாக அறுவடை செய்ய கூடாது.

10. ஒவ்வொரு சிறு குழுவும் 33 சதவிகிதத்திற்கும் குறைவாகவே குறுகியகால மரங்கள் இருக்கவேண்டும். (உ.த. தைலமரம்) தற்பொழுதிய குழுக்கள் 33 சதவிகிதத்திற்கு மேல் குறுகியகால சுழற்சி முறை மரங்களை வளர்ப்பின் அவர்கள் 5 வருடம் (2012) வரை கூடுதலான மரங்களை வளர்க்க காலம் கொடுக்கப்படும். அல்லது இந்த தகுதியடையும் வரை மரங்களை அறுவடை செய்ய இயலாது.

11. டிஐஎஸ்டி சிறு குழுக்கள் ஆண்டிற்கு ஒரு முறை கட்டாயமாக ஆய்வாளர்களை அழைத்து தங்கள் தோப்பினை ஆய்வு செய்து கொள்ள வேண்டும். இவர்கள் மற்ற சிறு குழுவினரோடு சேர்ந்து ஆய்வின் பொழுது, ஆய்வாளர்களுக்கு உணவும், தங்கும் இடமும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

12. சிறு குழு அங்கத்தினர் ஒன்றாக கூடி தங்களின் பயிற்சி முறைகளையும். ஆலோசனைகளையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வாரமும் சந்திக்க இயலாவிட்டால் மாதம் ஒரு முறையாவது சந்திக்க வேண்டும்.

13. சிறு குழு அங்கத்தினர் தாங்கள் மரங்களை வளர்க்கும் நிலத்தின் உரிமை சான்றினை அளிக்க வேண்டும்.

14. குழுவின் அங்கத்தினர்கள் டிஐஎஸ்டி பயிற்சியில் பங்கு கொண்டு மற்ற குழுக்களுடன் தங்களின் சிறப்பு பயிற்சி முறைகளை பகிர்ந்து கொள்ளவேண்டும்.

15. உங்கள் சிறு குழு உள்ள பகுதியில் மற்ற சிறு குழுக்களும் நடந்து செல்லும் தூரத்தில் அமைந்திருக்க வேண்டும். ஒரு வருடத்திற்குள் 100,000 மரங்களும் 5 வருடங்களுக்குள் 300,000 மரங்கள் வளர்க்கும் தகுதியும் கொண்டிருக்க வேண்டும்.